


இன்றைய செய்தி நாளைய வரலாறு

கலைஞர் 100 1924 - 2024

# முரசொலி

Murasoli

www.murasoli.in | நிறுவனர் : கலைஞர் மு. கருணாநிதி | murasolidaily@gmail.com

தொடக்கம் : 10.8.1942 – முரசு : 84 – ஒலி : 121 – திருவள்ளுவர் ஆண்டு 2056 – கார்த்திகை 25 – வியாழக்கிழமை 11 டிசம்பர் 2025 – வெளியூர் 12 பக்கங்கள் Established : 10.8.1942 - Volume : 84 - Issue 121: Thiruvalluvar Year - 2056 - Karthigai 25 - Thursday 11 December 2025 - Dak 12 Pages ₹ 5.00


### எந்த ஷா வந்தாலென்ன? எத்தகு சூழ்ச்சித் திட்டம் போட்டாலென்ன? ஒவ்வொரு வாக்குச் சாவடியிலும்

# எங்களது கருப்பு சிவப்புப் படை தக்க பாடம் புகட்டும்!

## “என் வாக்குச் சாவடி வெற்றி வாக்குச் சாவடி” கூட்டத்தில் பங்கேற்ற கழகத் தலைவர் – முதல்வர் மு.க.ஸ்டாலின் உறுதி!

**சென்னை, டிச. 11 -**

**“எந்த ஷா வந்தாலென்ன? எத்தகு சூழ்ச்சித் திட்டம் போட்டாலென்ன? ஒவ்வொரு வாக்குச் சாவடியிலும் எங்களது கருப்பு சிவப்புப் படை தக்க பாடம் புகட்டும்” என்று கழகத் தலைவர் - முதல்வர் மு.க.ஸ்டாலின் அவர்கள் “என் வாக்குச் சாவடி வெற்றி வாக்குச் சாவடி” நிகழ்ச்சியில் பங்கேற்று தமது சமூக வலைதளத்தில் உறுதிபட பதிவிட்டுள்ளார்.**

கழகத் தலைவரும் - முதலமைச்சருமான மு.க.ஸ்டாலின் அவர்கள் நேற்று (10.12.2025) மயிலாப்பூர் மேற்கு பகுதி, ஆழ்வார்பேட்டை, 122வது வட்டம், பாகம் 24இல் “என் வாக்குச்சாவடி, வெற்றி வாக்குச்சாவடி” கூட்டத்தில் கலந்து கொண்டு, வாக்குச்சாவடி குழு உறுப்பினர்களுடன் கலந்துரையாடினார்.

“தமிழ்நாடு தலைகுனியாது என் வாக்குச்சாவடி வெற்றி வாக்குச் சாவடி” பரப்புரையின் முதல் கட்டமாக 68,463 வாக்குச்சாவடிகளிலும் சிறப்பு தீவிர வாக்காளர் பட்டியல் திருத்தத்தின்போது (SIR) தி.மு.க . வாக்குச்சாவடி குழு உறுப்பினர்கள் 6.8 லட்சம் பேர் BLO மற்றும் வாக்காளர்களுக்கு உதவிட கழகத் தலைவர் - முதலமைச்சர் மு.க. ஸ்டாலின் அவர்கள் அறிவுறுத்தியிருந்தார்.

பரப்புரையின் இரண்டாம் கட்டம் இன்று முதல் தொடங்குகிறது. அடுத்த 30 நாட்களுக்கு மாநிலம் தழுவிய தீவிரமான பரப்புரையாக மேற்கொள்ளப்பட இருக்கிறது.

மேலும், தமிழ்நாடு முழுவதும் டிசம்பர் 10 முதல் ஜனவரி 10 வரை, பகுதி/ ஒன்றியம்/நகரம்/பேரூர் கழக செயலாளர்கள் 68,463க்கும் மேற்பட்ட வாக்குச் சாவடிகளுக்குச் சென்று 2026 சட்டமன்ற தேர்தலில் அந்தந்த வாக்குச்சாவடி அளவில் வெற்றி பெறுவதற்கான உத்திகளை வகுக்க பயிற்சியளிக்கப் பட்டுள்ளனர்.



கழகத் தலைவரும் – முதலமைச்சருமான மு.க.ஸ்டாலின் அவர்கள் நேற்று (10.12.2025) மயிலாப்பூர் மேற்கு பகுதி, ஆழ்வார்பேட்டை, 122வது வட்டம், பாகம் 24இல் ”என் வாக்குச்சாவடி, வெற்றி வாக்குச்சாவடி கூட்டத்தில் கலந்து கொண்டு, வாக்குச்சாவடி குழு உறுப்பினர்களுடன் கலந்துரையாடினார். இக்கூட்டத்தில், கழக இணை அமைப்புச் செயலாளர் அன்பகம் கலை, மயிலை மேற்கு பகுதி செயலாளர் நந்தனம் மதி, அவைத் தலைவர் ராஜேந்திரன், பகுதி, வட்டக் கழக நிர்வாகிகள், வாக்குச்சாவாடி குழு உறுப்பினர்கள் ஆகியோர் கலந்துகொண்டனர்.

### 6.8 லட்சம் பூத் கமிட்டி உறுப்பினர்கள்!

இதுவரை எந்தவொரு கட்சியும் செய்யாத வகையில் 1900 மேற்பட்ட பகுதி / ஒன்றியம் / நகரம் / பேரூர்க் கழகச் செயலாளர்களுடன் 78 கழக மாவட்ட செயலாளர்கள், 33 நாடாளுமன்ற உறுப்பினர்கள், 124 சட்டமன்ற உறுப்பினர்கள் மற்றும் மாநில, மாவட்ட குழு உறுப்பினர்கள் குழுவானது 30 நாட்களில் 68,463 வாக்குச்சாவடிகளையும் நேரடியாக பார்வையிடும் வகையில் திட்டமிடப்பட்டுள்ளது. மேலும், 6.8 லட்சம் திமுக பூத் கமிட்டி உறுப்பினர்களை உற்சாகப்படுத்தவும், அணிதிரட்டவும் பரப்புரை வடிவமைக்கப்பட்டுள்ளது.

கழகத் தலைவர் - முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்கள், ஒவ்வொரு பூத்திலும் தெருமுனை கூட்டங்கள், வீடு வீடாகச் சென்று கலந்துரையாடல்கள் மற்றும் வாக்காளர் சரிபார்ப்பு இயக்கங்கள் மூலம் அடித்தட்டு அளவில் கழகத்தினரை ஈடுபடுத்தி வாக்குச்சாவடி பலப்படுத்தப்பட வேண்டும் என்றும், முன்னோடி தலைவர்கள் உட்பட அனைத்து தி.மு.க. நிர்வாகிகளும் 2021 சட்டமன்ற தேர்தலை விட கூடுதல் வாக்குகளை தங்கள் வாக்குச்சாவடியில் பெறும் வகையில் தங்களது வாக்குச்சாவடிகளை பலப்படுத்தி வெற்றி வாக்குச்சாவடியாக மாற்றிக் காட்ட வேண்டும் என்றும் அறிவுறுத்தினார். மேலும், வாக்குச்சவாடி குழு உறுப்பினர்கள் அனைவரும் போர்க்கால அடிப்படையில் SIR பணிகளில் ஈடுபட வேண்டும் என்றும் கேட்டுக் கொண்டார்.

### வியூகத்தை விவாதித்து தலைமைக் கழகத்தில் சமர்ப்பித்தனர்!

இந்த வாக்குச்சாவடிக்கு 440 வாக்குகளை இலக்காக நிர்ணயித்து, ஒவ்வொரு வாக்குச்சாவடி உறுப்பினருக்கும் அவரவருக்கான இலக்கை கழகத் தலைவர் - முதலமைச்சர் அவர்கள் நிர்ணயித்துக் கொடுத்தார்.

இக்கூட்டத்தில் நிர்வாகிகள், பூத் கமிட்டியினர், சார்பு அணியினர் கலந்து கொண்டு இலக்காக நிர்ணயிக்கப்பட்டுள்ள 440 வாக்குகளைப் பெறுவதற்கான வியூகத்தை விவாதித்து அதனை படிவத்தில் குறித்து தலைமைக் கழகத்தில் சமர்ப்பித்தனர்.

இக்கூட்டத்தில், கழக இணை அமைப்புச் செயலாளர் அன்பகம் கலை, மயிலை மேற்கு பகுதிச் செயலாளர் நந்தனம் மதி, அவைத் தலைவர் ராஜேந்திரன், பகுதி, வட்டக் கழக நிர்வாகிகள், வாக்குச்சாவாடி குழு உறுப்பினர்கள் ஆகியோர் கலந்துகொண்டனர்.

இதனைத் தொடர்ந்து கழகத் தலைவர் - முதல்வர் மு.க.ஸ்டாலின் அவர்கள் தமது சமூக வலைதளத்தில் பதிவிட்டிருப்பதாவது: -

**எந்த ஷா வந்தாலென்ன? எத்தனை திட்டம் போட்டாலென்ன?**

**டெல்லி பாதுஷா என்ற நினைப்போடு தமிழ்நாட்டுக்கு வர நினைத்தால், ஒவ்வொரு வாக்குச்சாவடியிலும் எங்களது கருப்பு சிவப்புப் படை உங்களுக்குத் தக்க பாடம் புகட்டும்!**

**தமிழ்நாடு என்றைக்குமே ஆணவம் பிடித்த டெல்லிக்கு Out of Control தான்!**

**#என்_வாக்குச்சாவடி_வெற்றி_வாக்குச்சாவடி**


இவ்வாறு கழகத் தலைவர் - முதல்வர் மு.க.ஸ்டாலின் அவர்கள் தமது சமூக வலைதளத்தில் பதிவிட்டுள்ளார்.

---

## நான்தான் இந்தியா - பாகிஸ்தான் போரை நிறுத்தினேன்! மீண்டும் ட்ரம்ப் கருத்து!

பென்சில்வேனியா, டிச. 11 –

இந்தியா – பாகிஸ்தான் போரை நான் தான் நிறுத்தினேன் என்று மீண்டும் கூறியுள்ளார் அமெரிக்க அதிபர் டொனால்டு ட்ரம்ப்.



ஏற்கெனவே அவர் இவ்வாறாக 70 முறை கூறிவிட்டதாக விமர்சனங்கள் உள்ள நிலையில் அதை உறுதிப்படுத்துவது போலவே மீண்டும் அதனைக் கூறியுள்ளார் ட்ரம்ப்.

பென்சில்வேனியா மாகாணத்தில் நடந்த ஒரு பிரச்சாரப் பொதுக்கூட்டத்தில் பேசிய ட்ரம்ப் கூறியதாவது: –

கடந்த 10 மாதங்களில் நான் 8 போர்களை நிறுத்தியுள்ளேன். கொசோவா செர்பியா, பாகிஸ்தான் இந்தியா, இஸ்ரேல் – ஈரான், எகிப்து எதியோபியா, அர்மேனியா அசர்பைஜான், கம்போடியா தாய்லாந்து போர்களை நான் நிறுத்தியுள்ளேன்.

அண்மையில் மீண்டும் கம்போடியா தாய்லாந்து இடையே புகைச்சல் ஏற்பட்டது. நான் அவர்களுக்கு போன் கால் செய்து போரை நிறுத்தச் சொல்லப் போகிறேன். இப்படித்தான் இரண்டு சக்தி வாய்ந்த நாடுகள் இடையேயான போரையும் தொலைபேசியில் பேசி நிறுத்தினேன்.

இவ்வாறு ட்ரம்ப் கூறினார்.

---

## புதிய தகவல் ஆணையர் தேர்வு! மோடி – ராகுல் சந்திப்பு!

புதுடெல்லி, டிச. 11 –

மத்திய தகவல் ஆணையத்தில் காலியாக உள்ள 8 பதவிகளுக்கும், அடுத்த தலைமை தகவல் ஆணையர் மற்றும் தகவல் ஆணையர்களை முடிவு செய்யவும் பிரதமர் மோடி, எதிர்க்கட்சித் தலைவர் ராகுல் காந்தி உட்பட 3 பேர் கொண்ட குழு நேற்று கூடி ஆலோசனை நடத்தியது.

மத்திய தகவல் ஆணையத்தில் தலைவர் பதவியுடன் சேர்த்து மொத்தம் 10 பணியிடங்கள் உள்ளன. தற்போது இரண்டு தகவல் ஆணையர்கள் ஆனந்தி ராமலிங்கம் மற்றும் வினோத் குமார் திவாரி மட்டுமே உள்ளனர். செப்.13 அன்று தலைமை தகவல் ஆணையர் ஹீராலால் சமாரியா பதவி விலகி பிறகு புதிய தலைவர் நியமனம் செய்யப்படவில்லை.

---

## இன்றுடன் எஸ்.ஐ.ஆர். படிவம் பதிவு நிறைவு!

சென்னை, டிச. 11 –

தமிழ்நாட்டில், எஸ்.ஐ.ஆர். கணக்கீட்டுப் படிவங்களை ஒப்படைக்க நீட்டிக்கப்பட்ட காலக்கெடு இன்றுடன் நிறைவடைகிறது.

கடும் எதிர்ப்புக்கு மத்தியில், எஸ்.ஐ.ஆர். எனப்படும் வாக்காளர் பட்டியல் சிறப்பு தீவிர திருத்தப் பணிகள், தமிழ்நாட்டில் கடந்த நவம்பர் மாதம் 4ம் தேதி தொடங்கியது. படிவங்களை பூர்த்தி செய்து டிசம்பர் 4ம் தேதிக்குள் வழங்க வேண்டுமென தெரிவிக்கப்பட்டிருந்த நிலையில், டிசம்பர் 11ம் தேதி வரை நீட்டிக்கப்பட்டது.

இந்நிலையில், எஸ்.ஐ.ஆர். படிவங்களை ஒப்படைக்க நீட்டிக்கப்பட்ட காலக்கெடு இன்றுடன் நிறைவடைகிறது. தொடர்ந்து, வரைவு வாக்காளர் பட்டியல் டிசம்பர்16ம் தேதியும், இறுதி வாக்காளர் பட்டியல் பிப்ரவரி 14ம் தேதியும் வெளியிடப்படும். நேற்று முன்தினம் நிலவரப்படி தமிழ்நாட்டில், 6 கோடியே 40 லட்சத்து 84 ஆயிரத்து 624 படிவங்கள் விநியோகிக்கப்பட்டுள்ளன.

அதேபோல், கணக்கீட்டு படிவங்களை பதிவேற்றும் பணி 99.55 சதவீதம் முடிவடைந்துள்ளது. அதாவது 6 கோடியே 38 லட்சத்து 25 ஆயிரத்து 877 வாக்காளர்களின் படிவங்கள் ஆன்லைனில் பதிவேற்றம் செய்யப்பட்டுள்ளன. இதனிடையே, வாக்காளர் பட்டியலில் பெயர் சேர்க்க நேற்று முன்தினம் முதல் விண்ணப்பங்கள் பெறப்பட்டு வருகின்றன. ஜனவரின் 8ம் தேதி வரை விண்ணப்பிக்கலாம் எனத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

---

# வாக்குத் திருட்டு தேச விரோதச் செயல்!

## மக்களவையில் ராகுல் காந்தி கடும் விமர்சனம்!

புதுடெல்லி, டிச. 11 –

எஸ்.ஐ.ஆர். குறித்து மக்களவையில் சிறப்பு விவாதம் நடைபெற்றது. அப்போது வாக்குத் திருட்டு மிகப் பெரிய தேச விரோத செயல் என்று மக்களவையில் எதிர்க்கட்சித் தலைவர் ராகுல் காந்தி குற்றம் சாட்டினார்.

நாடாளுமன்ற மக்களவையில் வாக்காளர் பட்டியல் சிறப்பு திருத்தப் பணி (எஸ்ஐஆர்) தொடர்பான விவாதம் நடைபெற்றது.

இதில் மக்களவை எதிர்க்கட்சித் தலைவர் ராகுல்காந்தி பேசும்போது,

“பிரதமரும், மத்திய உள்துறை அமைச்சரும் இணைந்து தலைமைத் தேர்தல் ஆணையரை தேர்வு செய்கின்றனர். உலகில் வேறு எந்த பிரதமரும் இது போன்று செயல்படுவது கிடையாது. அனைத்து அரசு அமைப்புகளையும் ஆர்.எஸ்.எஸ். கைப்பற்றி வருகிறது” என்று குற்றம் சாட்டினார்.



இதையடுத்து, நாடாளுமன்ற விவகாரத் துறை அமைச்சர் கிரண் ரிஜிஜு கூறும்போது,

“எதிர்க்கட்சித் தலைவர் ராகுல் காந்தி, தேர்தல் சீர்திருத்தம் தொடர்பாக மட்டுமே பேச வேண்டும். எந்தவொரு அமைப்பையும் குற்றம் சாட்டக்கூடாது” என்றார்.

பா.ஜ.க. எம்.பி.க்கள் அனைவரும் ராகுல் காந்தியின் கருத்துக்கு ஆட்சேபம் தெரிவித்து கோஷமிட்டனர்.

இதற்கு நடுவே ராகுல் காந்தி பேசும்போது, “தலைமைத் தேர்தல் ஆணையரை நியமிக்கும் குழுவில் இருந்து உச்ச நீதிமன்ற தலைமை நீதிபதியை நீக்கியது ஏன்? தற்போது தலைமைத் தேர்தல் ஆணையரை நியமிக்கும் குழுவில் பிரதமர், மத்திய உள்துறை அமைச்சர், மக்களவை எதிர்க்கட்சித் தலைவர் ஆகியோர் மட்டுமே உள்ளனர்.

பிரதமரும் மத்திய உள்துறை அமைச்சரும் இணைந்து தலைமைத் தேர்தல் ஆணையரை தேர்வு செய்கின்றனர். மக்களவை எதிர்க்கட்சித் தலைவரின் கருத்துக்கு மதிப்பு கிடையாது. தலைமைத் தேர்தல் ஆணையரை மத்திய அரசு இயக்குவது எந்த வகையில் நியாயம் ஆகும்? தேர்தல் நிறைவடைந்த உடன் 45 நாட்களுக்கு பிறகு சிசிடிவி பதிவுகள் அழிக்கப்படுகிறது.

இதற்கு காரணம் என்ன? எனது கேள்விகளுக்கு மத்திய அரசு பதில் அளிக்க வேண்டும். தேர்தலின் போது வாக்கு திருட்டு நடைபெறுகிறது. இது மிகப்பெரிய தேச விரோத செயல். தேர்தல் ஆணையத்தை சீர்குலைத்து இந்திய ஜனநாயகத்தை பா.ஜ.க. அரசு கேள்விக்குறியாக்கி வருகிறது.

இவ்வாறு ராகுல் பேசினார்.

---

# நீதிபதி சுவாமிநாதன் சட்டவிதிகளை மீறியுள்ளார்!

## ஓய்வு பெற்ற நீதியரசர் அரி பரந்தாமன் குற்றச்சாட்டு!

*சென்னை, டிச. 11 -*

*திருப்பரங்குன்றம் தீப விவகாரத்தில், நீதிபதி ஜி.ஆர். சுவாமிநாதன் சட்ட விதிகளை மீறி தீர்ப்பு வழங்கியுள்ளதாக ஓய்வு பெற்ற உயர்நீதிமன்ற நீதிபதி அரி பரந்தாமன் குற்றம் சாட்டியுள்ளார்.*

*சென்னை சேப்பாக்கம் பத்திரிகையாளர் மன்றத்தில், ஓய்வு பெற்ற உயர்நீதிமன்ற நீதிபதி அரி பரந்தாமன் மற்றும் மதுரை உயர்நீதிமன்ற வழக்கறிஞர் வாஞ்சிநாதன் ஆகியோர் கூட்டாக செய்தியாளர்களை சந்தித்தனர்.*

*அப்போது பேசிய நீதியரசர் அரி பரந்தாமன், தமிழ்நாட்டின் சட்ட ஒழுங்கு குறித்து கவலைப்படாமல் தனது உத்தரவை அமல்படுத்துவதிலேயே நீதிபதி சுவாமிநாதன் கவனம் செலுத்தியதாக விமர்சித்தார்.*

*நீதிபதியாக உள்ளவர் நடுநிலையோடு செயல்பட வேண்டும் என்றும் ஆனால் பா.ஜ.க. நிர்வாகி ஹெச். ராஜா போன்றும் ஆளுநர் ரவி போன்றும் அவர் செயல்படுவதாக சாடினார்.*



*கார்த்திகை தீபம் எங்கு ஏற்ற வேண்டும் என்பதை கோயில் நிர்வாகம்தான் முடிவு செய்ய முடியும் என்றும் அவர் கூறினார்.*

*இதனைத் தொடர்ந்து பேசிய வழக்கறிஞர் வாஞ்சிநாதன், திருப்பரங்குன்ற தீப விவகாரத்தில் நீதிபதி ஜி.ஆர். சுவாமி நாதன், தமிழ்நாட்டில் திட்டமிட்டு அரசியல் நெருக்கடியை ஏற்படுத்த முயற்சிப்பதாக குற்றம் சாட்டினார்.*

*இதனால் அவரை பதவி நீக்கம் செய்ய சரியான முறையில் நாடாளுமன்றத்தில், இம்பீச்மெண்ட் நடவடிக்கையை இந்திய கூட்டணி எம்.பி.க்கள் முன்னெடுத்துள்ளதாக அவர் தெரிவித்தார்.*